1979 ஏப்ரல் 19]

*வினா எண். 738—திரு. நா. பழனிவேல்—திரு. வி. கே. கோதண்டராமன் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சமீபத்தில அரசு நடத்திய பெரியார் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களுக்கு இதுவரை அரசு செலவிட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கோயம்புத்தூர், மதுரை, வடஆர்க்காடு, திருநெல்வேலி மாவட்டங்களுக்கான மொத்தச் செலவு ரூ. 6,84,304·73.

	ரூ.	பை.
1. கோயம்புத்தூர் ஈரோடு	4,46,491	85
2. மதுரை	1,00,000	00
3. வேலூர்	63,071	11
4. திருநெல்வேலி	74,741	77
மொத்தம் ..	6,84,304	73

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, பெரியாருடைய நூற்றாண்டு விழாவினுடைய செலவைச் சொன்னார்கள். மொத்தச் செலவைக் குறிப்பிட்டுச் சொன்னால் உதவியாக இருக்கும் என்பதோடு, பெரியார், அவருடைய வாழ்க்கையில் மிகவும் சிக்கனமானவர். ஆகவே, அவருடைய விழாவுக்கு இப்படிச் செலவழிப்பது, அவருடைய இலட்சியத்திற்கு கொஞ்சம் களங்கம் ஏற்படுத்தாதா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பெரியாரவர்கள் வாழ்க்கையில் சிக்கனமானவர் என்பது உண்மைதான். எவைகளிலே சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது, சிக்கனம் என்பது என்ன என்பதற்கெல்லாம் அளவுகோல், இலக்கணம், அவரவருடைய மனத்தைப் பொறுத்தது. தந்தை பெரியாருக்கு, இந்த நாட்டினுடைய இருளை அகற்றுகின்ற சூரியனாக விளங்கிய அந்த பகுத்தறிவுப் பகலவனுக்குச் செய்த செலவு சிக்கனமான செலவுதான் என்று அரசு கருதுகிறது.

திரு. போ. கோபாலன் : பேரவைத் தலைவரவர்களே, எல்லா மாவட்டங்களிலும் பெரியாருடைய நூற்றாண்டு விழா நடத்தப்படுவதாக அறிகிறேன். ஆனால், சில மாவட்

டங்களில் நடத்தப்படவில்லை. விரைவில் அதற்கான ஏற்பாடு செய்யப்படுமா? குறிப்பாக, நீலகிரி மாவட்டத்தில் நூற்றாண்டு விழா நடக்கவில்லை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முறையாக, முடிந்த அளவு மாவட்டங்களிலே நடத்தப்படும்.

Sub-Court at Tiruvellore

* Q. No. 739—Thiru N. KITTAPPA; Will the Hon. the Minister for Law be pleased to state;

(a) whether any representation for the location of a Sub Court at Tiruvellore; has been made to the Government by the local sociation about 24th May 1978; and

(b) if so, the action taken thereon?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) திருவள்ளூரிலே ஒரு துணை நீதி மன்றம் ஏற்படுத்த உயர் நீதி மன்றம் சிபாரிசு செய்துள்ளது, அதனுடைய முன்னுரிமைப் பட்டியலிலே உள்ளது. நிதிநிலைமையைப் பொறுத்து, 1979–80 ஆம் ஆண்டிலே துவக்க இந்த அரசு உத்தேசித்துள்ளது.

திரு. கே. ஜே. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம் போளூரில் முன்சிப் சப்கோர்ட் ஏற்படுத்த அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா? அது எந்த நிலையில் உள்ளது என்பதை அறிவிப்பார்களா?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, அரசினுடைய பரிசீலனையில் உள்ளது.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவை ஒட்டி சிறைக் கைதிகள் விடுதலை.

*வினா எண். 740—திரு. கே. பண்ணை சேதுராம்.

திரு. மு. அம்பிகாபதி,

திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி சிறையில் இருக்கும் அரசியல் மற்றும் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்ற கைதிகளை விடுதலை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?